Registered as a Newspaper

பக்கங்கள் 16

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 138

வியாழக்கிழமை 13 ஏப்ரல் 2023

பங்குனி 30 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## 13ஆம் திருத்தம் நடைமுறையாக்கல்

## உண்மையைக் கண்டறியும் பொறிமுறை

# 3 கட்டங்களாக தேசிய நல்லிணக்கம்; கட்டியெழுப்ப அமைச்சரவை உபகுழு!



**கொழும்பு, ஏப்ரல் 13**

**மூன்று கட்டங்கள் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப அமைச்சரவை உபகுழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

»15



புத்தாண்டுக் கொண்டாட்டம்

## யாழ்ப்பாண நகரில் கடும் சனக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 13

தமிழ், சிங்களப் புத்தாண்டு நாளை பிறக்கவுள்ள நிலையில் புத்தாடைக்கொள்வனவில் யாழ்ப்பாண மக்கள் ஆர்வமாக ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

யாழ். நகரப் பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள், முனீஸ்வரர் ஆலயப் பகுதியி »15

## ஈழத்தின் மூத்த ஊடகர் மாணிக்கவாசகம் மறைவு



யாழ்ப்பாணம், ஏப். 13

ஈழத்தின் மூத்த ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசம் நேற்று அதிகாலை மறைந்தார்.

வவுனியா மண்ணி »15

சிறுவர் இல்ல சர்ச்சைகள்

## தீவிரமான ஆராய்வு வடக்கில் ஆரம்பம்

கிராம அலுவலர் ரீதியாக முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13

சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், பாலர் பகல் பராமரிப்பு நிலையங்கள், சிறுவர் விடுதிகள் மற்றும் ஏனைய சிறுவர் தங்குமிடங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக சிறுவர் நன்னடத்தை »15

## போர்க்காலக் குரலோனை காவுகொண்ட காலன்

*மாணிக்கவாசகத்தின் மறைவுக்கு ஈ.சரவணபவன் இரங்கல்*

யாழ்ப்பாணம், ஏப். 13

போர்க்காலத்தில் தமிழ் மக்கள் நித்தமும் கேட்ட குரல் மாணிக்க வாசகத்தினுடையது. அன்றைய இக்கட்டான காலகட்டத்தில் சாவு எந்நேரமும் வரலாம் என்ற அச்சுறுத்தலுக்கு மத்தியில் தனது பணியை இம்மியும் பிசகாது ஆற்றியவர் »15

உ /த விடைத்தாள் மதிப்பீடு

## இன்னமும் முடிவில்லை

கொழும்பு, ஏப். 13

தமது கோரிக்கைகள் தொடர்பில் திருப்திகரமான முடிவு எட்டப்படும் வரை உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு »15

மஹிந்த வீட்டில்

## புத்தாண்டு ஆயத்தம் களைகட்டுகின்றது!

வைரலாகும் காணொலி

கொழும்பு, ஏப். 13

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச குடும்பத்தினரின் புத்தாண்டுக் கொண்டாட்ட ஆயத்தங்கள் தொடர்பான காணொலியொன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. »15

தமிழர் மரபுரிமைகள் பாதுகாப்போம்

## உண்ணாவிரதப்போராட்டம் ஞாயிறன்று நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 13

தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் பல்வேறு ஆக்கிரமிப்புக்களையும் எதிர்த்து ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி »15

## மருத்துவக் கண்காணிப்பின்மை: குழந்தை பரிதாபகரமாகச் சாவு!

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 13

மருத்துவக் கண்காணிப்பின்மை காரணமாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் குழந்தை இறந்துள்ளது.

கூவில், புலோலி வடக்கு புலோலியைச் சேர்ந்த »15

## குளத்திலிருந்து சடலம் மீட்பு

முல்லைத்தீவு, ஏப். 13

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம் நடனமிட்டான் பிள்ளையார் ஆலயத் »04

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நொக்ஸ் முன்பள்ளி விவகாரம்: அறிக்கை வழங்கக் கோரிக்கை

## புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகம் உத்தரவு

**முல்லைத்தீவு, ஏப். 13**

**முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் 'நொக்ஸ்' என்ற பெயரில் இயங்கும் கிறிஸ்தவ முன்பள்ளியின் அனுமதி தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகம் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.**

முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனையின் உரிய அனுமதிகள் இன்றி இந்த முன்பள்ளி செயற்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இதையடுத்தே அந்த முன்பள்ளிக்கான உரிய அனுமதி தொடர்பிலும், அந்த முன்பள்ளியில் மேற்கொள்ளப்படும் விடயதானங்கள் தொடர்பாகவும் அறிக்கை வழங்குமாறு புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகம் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேசசெயலர் ஜெயக்காந்தனை தொடர்புகொண்டு கேட்ட போது, முன்பள்ளி தொடர்பில் முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனையிடம் அறிக்கை தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கை கிடைத்த பின்னர்தான் மேலதிக விடயங்கள் தொடர்பில் தெரியவரும். இது தொடர்பில் உரிய முறையில் பகிரங்கப்படுத்தப்படும் - என்றார். (ம-14)

## மோட்டார்சைக்கிளை செலுத்திய சிறுவர்கள் இரண்டு பேர் காயம்!

யாழ்ப்பாணம், ஏப். 13

பருத்தித்துறை - புற்றளை பகுதியில் மோட்டார் சைக்கிளொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த இரண்டு சிறுவர்கள் காயமடைந்துள்ளனர். 14 மற்றும் 17 வயதான சிறுவர்களே இவ்வாறு காயமடைந்தவர்களாவர்.

சிறுவர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14)

## விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஏப். 13

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் இருவர் காயமடைந்தனர் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன. விபத்துக்களில் காயமடைந்த இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். விபத்து தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14-9)

## அலுவலகம் திறப்பு

கிளிநொச்சி, ஏப். 13

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் புதிய அலுவலகமொன்று கிளிநொச்சி கிளிநகர் சமுர்த்தி வங்கிக்கு அருகாமையில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் அனைத்துக் கடிதத் தொடர்பாடல்களும் புதிதாக இயங்கும் மேற்குறித்த முகவரியின் மூலம் மேற்கொள்ளப்படும் என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைத் தலைவர் இ.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (ம-14)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தில் இறுதிப் பங்குனித் திங்கள் உற்சவம் கடந்த திங்கட்கிழமை நூற்றுக் கணக்கான பக்தர்களுடன் சிறப்பாக இடம்பெற்றது. அடியவர்கள் தீர்த்தக்கரையில் நீராடி பன்றித்தலைச்சி அம்மனுக்கு பொங்கல் பொங்கி நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (ச-66)

## தூக்கிலிருந்து சடலம் மீட்பு!

சாவகச்சேரி - மிருசுவில் வடக்குப் பகுதியில் தூக்கிலிருந்து பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-14-9)



தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

அதிகாலை அம்பாளுக்கு விசேட அபிஷேக பூசை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து காலை 6.30 மணிக்கு ஆலய முன்றிலில் வழுந்துப் பானை வைத்தலுடன் பொங்கல் விழா ஆரம்பமானது. மாலை வரை ஆலயச் சூழலில் பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் பொங்கல் வைத்து படையல் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டனர். (ம-14-66)

## ஹெரோய்னுடன் இளைஞர் கைது!

யாழ்ப்பாண நகரப் பகுதியில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். கஸ்தூரியார் வீதியில் வைத்து 40 மில்லிகிராம் ஹெரோய்னுடன் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-14-125)

## சாவ. வர்த்தக நிலையங்களில் நேற்றுத் திடீர் பரிசோதனைகள்

சாவகச்சேரி நகரப் பகுதியில் வர்த்தக நிலையங்களில் நேற்றுப் புதன்கிழமை சுகாதாரப் பகுதியினர் திடீர் பரிசோதனைகளை முன்னெடுத்தனர்.

அதன்போது வர்த்தக நிலையங்களில் காணப்பட்ட திகதி காலாவதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. (ம-14-9)

## அனுமதியின்றி கள் விற்பனை

### ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 13

நெடுந்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெடுந்தீவு 6ஆம் வட்டாரத்தில் அனுமதிப்பத்திரமின்றி கள் விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார் என்று நெடுந்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிமிருந்து 9 லீற்றர் கள் மீட்கப்பட்டுள்ளதுடன், அவருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று நெடுந்தீவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-14-125)

## ஆவரங்கால் பகுதியில் மோ.சைக்கிள் திருட்டு


யாழ்ப்பாணம், ஏப். 13

ஆவரங்கால் சிவசக்தி திருமண மண்டபத்துக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திருடப்பட்டுள்ளது.

திருமண மண்டபத்துக்கு முன்பாக மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு திருமணத்துக்குச் சென்றுவிட்டு, திரும்பிவந்து பார்த்த போதே மோட்டார் சைக்கிள் திருடப்பட்டது தெரியவந்தது. இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கமைய அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-14-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை இந்தியா கப்பல் சேவைக்காக



# காங்கேசன் துறைமுகத்தை விரிவாக்குகிறது கடற்படை!

கொழும்பு, ஏப். 13

**இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் கப்பற்சேவை ஆரம்பமாகவுள்ள நிலையில், அதற்காக சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் நோக்கில் காங்கேசன்துறை துறைமுகத்தை விரிவாக்கும் நடவடிக்கையில் கடற்படை ஈடுபட்டு வருகின்றது.**

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க இலங்கைக் கடற்படை, காங்கேசன் துறை துறைமுக வசதியை அதன் ஆளணி மற்றும் நிபுணத்துவத்தை வழங்குவதன் மூலம் விரிவாக்குவதற்கு ஆதரவளித்து வருகிறது. அதன்படி பயணிகள் கப்பற்சேவையைப் பயன்படுத்த உத்தேசித்துள்ள மக்களின் குடிவரவு மற்றும் சுங்க அனுமதிக்கான பயணிகள் முனையத்தை நிர்மாணிக்கும் பணியை இலங்கைக் கடற்படை மேற்கொண்டுள்ளது.

கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான பொருள்கள் இலங்கை துறைமுக அதிகாரசபையால் வழங்கப்படுகின்றன. பயணிகள் முனையத்தின் நிர்மாணப் பணிகள் விரைவில் முடிவடைந்து அதன் செயற்பாட்டு நோக்கங்களுக்காக இலங்கை துறைமுக அதிகார சபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்படும் மொத்த கட்டுமானங்களுக்கான செலவு 144 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14-இ)

## கர்ப்பிணியான மனைவி மீது இடியன் துப்பாக்கியால் சூடு

கிளிநொச்சி, ஏப். 13

கிளிநொச்சி - அக்கராயன் குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், ஐந்து மாத கர்ப்பிணியான மனைவி மீது துப்பாக்கிச்சூடு நடத்திய குற்றச்சாட்டில் சந்தேகநபரான கணவன் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து இடியன் துப்பாக்கியொன்றும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொடூரம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த கர்ப்பிணி உடனடியாக அக்கராயன் குளம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு முதற்கட்ட சிகிச்சைகள் வழங்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கணவன் மதுபோதைக்கு அடிமையானவர் என்பதால், குடும்பத்தில் அடிக்கடி சண்டைகள் நிகழும் என்றும் இதுவே இந்தக் கொடூரத் தாக்குதலுக்குக் காரணம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ம-ச-214-10)



## தண்டவாளம் அமைப்பதற்கு எதிராக மக்கள் போராட்டம்

### பணிகள் இடைநிறுத்தம்

வவுனியா, ஏப். 13

வவுனியா - ஈரப்பெரியகுளம், விஜயபாகு கம கிராமத்தில் மக்கள் 32 வருடங்களாகப் பயன்படுத்தி வந்த வீதியை ஊடறுத்து, அநுராதபுரம் வவுனியாவுக்கு ரயில் பாதை அமைக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு கிராம மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டதையடுத்து பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது: விஜயபாகு கம கிராமத்தில் 50 வரையிலான குடும்பங்கள் வசித்து வருகின்றன. நாம் கடந்த 32 வருடங்களாகப் பயன்படுத்தி வந்த வீதியை மறித்து ரயில் பாதை அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எம்மை குறித்த வீதியிலிருந்து 4 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பாதையைப் பயன்படுத்துமாறு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எமக்கு நல்லதொரு தீர்வை வழங்காமல், இந்த ரயில்பாதையை அமைக்கும் பணிகளை முன்னெடுக்கக்கூடாது - என்றனர். இதனால் அநுராதபுரம் வவுனியா வரையிலான ரயில் பாதை திருத்தப் பணிகள் ஈரப்பெரியகுளம், விஜயபாகு கம பகுதியில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. (ம-14-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குதிரைக்கு கொம்பு முளைச்சால் என்னவெல்லாம் நடக்குமெண்டதுக்கு ஒரு உதாரணம் இந்த 9ஆம் திகதி ஒட்டுச்சுட்டானில நடந்திருக்கு. அங்கத்தை பொலிஸ் ஸ்ரேசனில வேலை செய்யிற பொலிஸ் ஒருத்தருக்குத்தான் இப்பிடி கொம்பு முளைச்சிருக்கு. இந்தக் கொம்பு முளைச்ச பொலிஸுக்கு அங்கத்தை ஊர்ப்பெடியன் ஒருத்தனுக்கும் இடையில முதலே ஒரு கொழுவல் இருந்திருக்கு.

போன 9ஆம் திகதி அந்தப் பெடியன் தன்ர சினேகிதனோட, மோட்டர் சைக்கிளில வரேக்க அந்தக் கொம்பு முளைச்ச பொலிஸ் அவை ரண்டு பேரையும் வழிமறிச்சு, சோதிக்கப் போறம் எண்டு சொல்லி, அந்தப் பெடியனுக்கு அடிச்சு, ஜீன்ஸுக்க இருந்த ஒரு லட்சம் ரூபா காசை பறிச்சிட்டார். இதுகளை அந்தப்பெடியனும் சிநேகிதனும் போனில வீடியோ எடுக்க வெளிக்கிட, இன்னும் நாலைஞ்சுதரம் அடிச்சுப் போட்டு, 'ரண்டு பேரும் குடிச்சிருக்கிறியள்' எண்டும் சொல்லி ஆக்களை அரெஸ்ட் பண்ணிக்கொண்டு பொலிஸ் ஸ்ரேசனுக்கு கொண்டு போட்டாராம். அங்கையும் கொண்டு போய், அடி அடியெண்டு அடிச்சிருக்கிறார் அந்தப் பொலிஸ்காரர். பிறகு ஒருமாதிரி அந்தப் பெடியன் ஒரு லோயருக்கு இதைப்பற்றி தெரியப்படுத்த, அந்த லோயர் விசயத்தை அந்த பொலிஸ் ஸ்ரேசனுக்குப் பொறுப்பான அதிகாரிக்கு தெரியப்படுத்தி இருக்கிறார். அதுக்குப் பிறகுதான், அடுத்தநாள் 10ஆம் திகதி தாங்கள் எடுத்த ஒரு லட்சம் ரூபா காசையும் திருப்பிக் குடுத்து, ஆளையும் வெளியில பொலிஸ் விட்டதாம்.

'சிலவேளை லோயருக்கு இந்த விசயம் தெரியாட்டி, பொய் கேஸ் போட்டு என்னையும் உள்ளுக்க தள்ளி, காசையும் ஆட்டையைப் போட்டிருப்பாங்கள்' எண்டு அந்தப் பெடியன் பிறகு தனக்குத் தெரிஞ்சவைக்கு சொல்லியிருக்கிறான். இப்பிடி கண்டபடி, பொய்க்குற்றச்சாட்டில ஒரு ஆளைப் பிடிக்கிறதுக்கு பொலிஸுக்கு அதிகாரமில்லை. ஆனால் அந்தப் பொலிஸ்காரர் அப்பிடிப் பிடிச்சதோட, ஸ்ரேசனுக்கு கொண்டு வந்தும் அடிச்சிருக்கிறார். இப்பிடி தன்ர தனிப்பட்ட பகைக்காக அதிகாரத்தை துஷ்பிரயோகம் பண்ணத்தான் பொலிஸில சேர்ந்தவரோ எண்டும் சனத்துக்கு டவுட். இப்பிடியான ஆக்களை பொலிஸ் திணைக்களம் விசாரணை நடத்தி, வேலையைப் பறிக்கோணும் இல்லாட்டி இனிமேல் இப்பிடிச் செய்யக்கூடாதளவுக்கு பனிஸ்மெண்ட் குடுக்கோணும். அப்பதான் சனம் பொலிஸை மதிக்க நினைக்கும். இல்லாட்டி 'உவங்கள் காசைக் குடுத்தால் என்னவும் செய்வாங்கள்' எண்ட நிலைதான் பொலிஸுக்கு தொடர்ந்தும் இருக்கும்.



- பட்சி

# மரண அறிவித்தல்



தோற்றம்
03.05.1951

மறைவு
12.04.2023

## திருமதி சகாதேவன் சரோஜினிதேவி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவி என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி சகாதேவன் சரோஜினி தேவி நேற்று (12.04.2023) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சகோதேவனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமசாமி கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், திரு.திருமதி சண்முகசுந்தரம் தம்பதியினரின் மருமகளும், கனகேஸ்வரி, கனகாம்பிகை, துரைராசா, நடராசா, தர்மகுலசிங்கம் (புண்ணியம்), அருளம்பலம், செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற தேவகி மற்றும் புஸ்பேஸ்வரி, இந்திராவதி, புஷ்பராணி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான ராஜா, மோகனரஞ்சிதன் ஆகியோரின் மைத்துனியும், நந்தினிதேவி தவராசா, மோகினி கனேஸ்வரன், சிறீஸ்கந்தராஜா மாலதி, பால்ராஜ் கோமதி (நோர்வே) மதனராஜ் ஆகியோரின் அன்புச் சிறியதாயாரும், கோகுலன் விதுஷாயினி, சர்மிளா ராஜ்குமார், மிராஜினி தவச்செல்வன், தனுஷ்காந் சோபனா, ஜனுசா ரோகித், சருண்காந் ஆகியோரின் அன்பு மாமியாரும், பரணிகாந் சிவலோஜினி, சரணிகாந், தரணிகாந், அபிஷானா, ருஷானா, கங்கேயா, வைகையா, பீஷ்மன், விதுஷன், சஞ்சனா, ஆருத்திரன், நிதிஷ்தீரன், ஆகனியா, ஆத்விக் ஏஞ்சலினா, நிக்கிதா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2023) வியாழக் கிழமை பிற்பகல் 5 .00 மணியளவில் கண்டி வீதி 163/2, சின்னக்கிணத்தடி ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**163/2, சின்னக்கிணத்தடி ஒழுங்கை,**
**அரியாலை.**
**021 222 7221**

(CS 49994) (K-1)

**தகவல்**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



## மேரிதாசன் நாகசெல்வம்

வட்டுக்கிழக்கைப் பிறப்பிடமாகவும் டச்சு றோட் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட மேரிதாசன் நாகசெல்வம் கடந்த (11.04.2023) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் மேரிதாசன் சாரதாதேவி தம்பதியரின் அன்பு மகனும், ரிக்ஷனின் அன்புத் தந்தையும், மௌலி, அச்சன், மீரா, வர்மா, ஆரணி, சௌந்தரி ஆகியோரின் சகோதரனும், கேதீஸ்வரன், ஜெகன், மோகணாம்பிகை, சிவலக்ஷன் ஆகியோரின் மைத்துனரும், சரணா, வியாசன், கேசரா, ஆராத்யா, லஹரியின் மாமனும், சாத்வீகாவின் பெரிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**டச்சு வீதி, சித்தன்கேணி.** (CR 39641) A-1 **குடும்பத்தினர்.**

## குளத்திலிருந்து...

துக்கு அருகிலுள்ள குளம் ஒன்றிலிருந்து குடும்பத்தலைவரின் சடலம் நேற்று இரவு மீட்கப்பட்டுள்ளது.


3ஆம் ஒழுங்கை வள்ளிபுனத்தைச் சேர்ந்த டா.டேவிட் (வயது -50) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குளத்தின் கரையில் இவரின் துவிச்சக்கரவண்டி, செருப்பு மற்றும் சறம் என்பன காணப்பட்டன. புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குளத்தில் இறங்கி சடலத்தை மீட்டுள்ளார். (ஏ-19)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
28 . 05 . 1927

விண்ணில்
14 . 03 . 2023



## அமரர் யோகேஸ்வரி திருநாவுக்கரசு

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.04.2023) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible] வீதி,
உரும்பிராய் வடக்கு.

[illegible]

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## யாருக்கானது இந்தப் போர்?

'தமிழர் தொன்மம் காப்போம், ஆதிசிவன் ஆலயங்களை மீட்போம்' என்ற தொனிப்பொருளில், நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்து ஆலயங்களுக்கு விடுக்கப்படும் மத நிந்தனைகள் நிறுத்தப்படவேண்டும் என்றும் இந்த மத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக அரசாங்கம் காத்திரமானமுறையில் செயலாற்றவேண்டும் என்றும் இந்துமதத் தலைமைகளால் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் செவிமடுக்கப்படாததை அடுத்தே, 'போராட்டம்தான் தீர்வென்ற ரீதியில்' போராடிப் பார்த்துவிடுவதற்கு தற்போது பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் கோரப்பசியால் அனைத்து மதங்களும்தான் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளன. இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், கத்தோலிக்கம் என்று எந்த மதங்களும் இதற்கு விதிவிலக்கில்லை. ஆனால், இவற்றில் அதிக பாதிப்புக்களை எதிர்கொண்ட மதமாக இந்து மதமே காணப்படுகின்றது. 'இலங்கை ஒரு பௌத்த நாடு' என்ற கற்பிதத்தை – கற்பனையை மெய்ப்பித்து விடுவதற்கு பல தசாப்தங்களாகவே பௌத்த தலைமைகளும் பேரினவாதிகளும் தலையால் மண்கிண்டிக் கொண்டிருக்கின்றனர். இவர்களின் இந்த நடவடிக்கைக்கு பிரதான முட்டுக்கட்டை ஆதிசிவன் ஆலயங்கள்தான். ஆதிசிவன் ஆலயங்களை வைத்துக் கொண்டு அப்பட்டமாக ஒரு வரலாற்றைப் புனையவோ – மாற்றவோ – தமிழர் தொன்மையை மறுதலிக்கவோ முடியாது. இதுதான் தமிழர்களின் புராதன ஆலயங்களான ஆதிசிவன் ஆலயங்கள் அழிக்கப்படுகின்றமைக்குப் பிரதான காரணம்.


பண்டைய இலங்கைத்தீவில் நான்கு திசைகளிலும் ஐந்து சிவ தலங்கள் காணப்பட்டன. அதில் ஒன்றுதான் சந்திரமௌலீஸ்வரம். இலங்கையின் தெற்குத் திசையில் தமிழர் பகுதியான தேவேந்திர முனையில் சந்திரமௌலீஸ்வரம் இருந்ததை முதலாம் நூற்றாண்டின் கிரேக்க யாத்திரீகர்களின் பயணக்குறிப்புக்கள் எடுத்துரைக்கின்றன. போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட அந்த ஆலயம் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது: ஆனால், அது சந்திரமௌலீஸ்வரமாகக் கட்டியெழுப்பப்படவில்லை. மாறாக விசித்திராம விகாரையாகவே அது எழுப்பப்பட்டது. இன்று அந்தக் கிராமத்தின் பெயர் தேவிநுவர. இவ்வாறாகத்தான் வரலாறுகள் திரிக்கப்பட்டும் – மாற்றப்பட்டும் வருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில், ஆதிசிவன் ஆலயங்களை மீட்பதற்காகவும், தமிழர் தொன்மங்களைக் காப்பதற்காகவும் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள இந்தத் தொடர் போராட்டம் காலத்தேவையானதும் காத்திரமான நடவடிக்கையுமாகும். இதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. ஆனால், இந்தப் போராட்டங்களை வெறுமனே இந்துக்களுக்கான போராட்டங்களாகக் குறுக்கிவிடுதல் தகாது. இது தமிழர்களுக்கான போராட்டமாக இருத்தலே ஆகச்சிறந்த நடவடிக்கையாக இருக்கும். ஆதலால், மதப் பிரிவினைகளுக்கு அப்பாற்பட்டு கிறிஸ்தவர்கள், கத்தோலிக்கர்கள் என அனைத்துத் தமிழர்களும் இந்தப் போராட்டத்தில் தமது பங்கேற்பை உறுதிப்படுத்த வேண்டும். அது வடக்கில் அண்மைக்காலமாக நிலைகொண்டிருக்கும் மதப்பதற்றம் தணிவதற்கும் வழிவகைகளை ஏற்படுத்தும்.

ஆனால், இந்த ஒற்றுமைக்கு கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும், கத்தோலிக்கர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையே ஒருசில பிரதேசங்களிலுள்ள வழிபாட்டுத் தலங்களை மையப்படுத்தித் தோற்றம் பெற்றுள்ள மனக்கிலேசங்கள் பெரும் தடைக்கல்லாக இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. இருப்பினும், அவற்றைக் களைந்து, தமிழர் தொன்மம் காக்கின்ற, ஆதிசிவன் ஆலயங்களை மீட்கின்ற இந்தப் போராட்டத்தில் அனைவரின் பங்கேற்பையும் உறுதிப்படுத்துவதுதான் தலைமைகளுக்கும் தலைமைத்துவத்துக்கும் அழகு. 'ஒற்றுமைக்குத் தேவை பொதுஎதிரி' என்பார்கள். சிங்கள – பௌத்த பேரினவாதம்தான் அந்தப் பொதுவான எதிரி. அது சிறுபான்மையினரான உங்கள் அனைவரையும்தான் இலக்குவைக்கின்றது. அதை எதிர்கொள்வதற்கு சிறுபான்மைச் சமூகத்தினர் தமக்குள் இருக்கும் மிகக்குறுகிய வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட வேண்டும். பரந்த காட்டில் பலவீனமான உயிரின[illegible] நாள் தாக்குப்பிடித்ததாக சரித்திரமே இல்லை, [illegible] பலம்பெறுங்கள்.

**நாளொரு நல்வார்த்தை**

"பட்டினியால் சாக
நேர்ந்தாலும்
பகுத்தறிவை அடகு
வைக்காதே"
– ஆவ்பரி



# கடன்களை மறுசீரமைக்க சீனா ஆதரவு வழங்குமாம்

### மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை

**கொழும்பு, ஏப். 13**

**இலங்கையின் கடன் மறுசீரமைப்புச் செயன்முறைக்கு சீனா ஆதரவளிக்கும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தமது எதிர்பார்ப்பை வெளியிட்டுள்ளார்.**



சர்வதேச நாணய நிதியத்துடனான அடுத்தகட்டப் பேச்சுக்கள் மற்றும் நடவடிக்கைகளுக்காக அமெரிக்கா சென்றுள்ள அவர், அங்கு வைத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னதாக சீனா, இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு உதவவேண்டும் என்று அமெரிக்க திறைசேரி செயலாளர் பகிரங்கமாகவே வலியுறுத்தியிருந்தார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே ஆளுநர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை மீதான கடன் மறுசீரமைப்பு செயன்முறைகள் தொடர்பில் ஜப்பான் மற்றும் இந்திய நிதி அமைச்சர்கள் விரைவில் அறிவிக்கவுள்ளனர். இந்த அறிவிப்பு விடுக்கப்படும் செய்தியாளர் சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணையத்தின் வாயிலாகக் கலந்துகொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## பல்கலை விரிவுரையாளர்கள் புறக்கணிப்பை கைவிட முடிவு

கொழும்பு, ஏப். 13

பணிப்புறக்கணிப்பை கைவிட்டு, எதிர்வரும் 17ஆம் திகதி முதல் கற்பித்தல் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க சம்மேளன உறுப்பினர்களிடையே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனம், கடந்த மாதம் 9ஆம் திகதி முதல், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையில் ஐதரசன் உற்பத்தி

கொழும்பு, ஏப். 13

இலங்கையில் எரிசக்தித்துறையை வலுப்படுத்துவதற்கு திருகோணமலை துறைமுகத்தில் எரிபொருள் குழாய்களை பொருத்தி புதுப்பிக்கத்தக்க இயற்கை ஐதரசன், அமோனியா போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கு இந்தியா இணங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையிலுள்ள 99 எண்ணெய்க் குதங்களையும் பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் செய்யக்கூடிய வகையில் செயற்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். இந்த நிலையிலேயே புதுப்பிக்கத்தக்க இயற்கை ஐதரசன் உற்பத்தி செய்யக்கூடிய இடமாக திருகோணமலை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. (ச-6)

14.04.2023 வெள்ளிக்கிழமை
சித்திரை 01
சுபநேரம் : 06.05 - 07.35
ராகுகாலம் : 10.35 - 12.05
தமிழ்ப் புத்தாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியம் ஒன்றுதான் உதயனின் மதமும் பலமும்!

## தென் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் உதயன் மீதான தாக்குதலுக்குக் கண்டனம்

அம்பாறை, ஏப். 13

உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் மதக்குழுவொன்று அத்துமீறி நுழைந்து அடாவடித்தனம் புரிந்தமைக்கு தென்கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

'எந்த மதங்களுக்கும் உட்படாமல், அந்த எல்லைக்கு அப்பாற்பட்டுப் பணிபுரியும் உதயனுக்கு, மதக்குழுவொன்று அச்சுறுத்தல் விடுத்தமை மன்னிக்க முடியாத விடயம்' என்றும் அந்தச் சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் தென்கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் மதக்குழுவொன்று அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்த எத்தனித்தமையையும், அச்சுறுத்தியமையையும் தென்கிழக்கிலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தினராகிய நாங்கள் கடுமையாகக் கண்டிக்கின்றோம். ஊடகங்களுடன் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவது இயல்பானதுதான் என்பதை துறைசார் விடயப்பரப்பில் நீண்ட காலமாக இயங்கிக் கொண்டிருக்கும் நாங்கள் நன்கறிவோம். ஆனால், அந்த முரண்பாடுகள் அணுகப்படுவதற்குப் பல்வேறுபட்ட ஜனநாயகப் படிநிலைகள் உள்ளன. அவற்றில் எந்தக் குறைந்த பட்ச இலட்சணமும் மேற்படி மதக் குழுவின் நடவடிக்கையிலோ அல்லது அதை இயக்கிய போதகரின் நடத்தையிலோ இல்லை.

இந்த மதக்குழுவினர் அடிப்படையில் தமிழர்கள். ஆதலால், உதயனின் கடந்தகால வரலாற்றை, சிங்கள - பௌத்த பேரினவாதத்தால் உதயன் அச்சுறுத்தப்பட்டமையை அந்த மதக்குழுவினரும் அறிவார்கள். உதயனின் போராட்டமும் அதன் இழப்பும் அர்ப்பணிப்பும் தமிழர்களுக்கானதே அன்றி தனக்கானதல்ல.

உதயன் மட்டுமல்ல, ஊடகங்கள்தான் சிறுபான்மைச் சமூகத்தின் இருப்பாக இன்று எஞ்சிநிற்கின்றன. ஆதலால், அனைத்து ஊடகங்களையும் பலப்படுத்த வேண்டிய பொறுப்பு எமக்கிருக்கின்றது. அந்தப் பலம்தான் எம் இருப்பும் எம் எதிர்காலமுமாகும் - என்றுள்ளது. (அ-ம)

# மதஒற்றுமையை சீர்குலைக்கும் அராஜகம் கண்டிக்கத்தக்கது!

## மானிப்பாய் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13

சட்டவிரோத காணி அபகரிப்பு மற்றும் அடாவடித்தனத்தை ஆதாரத்துடன் அம்பலப்படுத்திய ஊடகத்தின் மீதான அச்சுறுத்தல் ஆகியவை வன்மையாக கண்டிக்கத்தக்கது. தமிழ் மக்களிடையேயான மத ஒற்றுமைக்கு இந்த அராஜகச் செயற்பாடு கேடுவிளைவிக்கிறது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மானிப்பாய் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் அ.ஜோன் ஜிப்பிரிக்கோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச காணியை ஆக்கிரமித்து மதமாற்றத்திலும் சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக குற்றஞ்சாட்டப்படும் மதக்குழுவின் அட்டூழியத்தை 'உதயன்' அம்பலப்படுத்தியது. நடுநிலைமையாக வெளிப்படுத்திய செய்தியை மூடிமறைக்க குறித்த மதக்கும்பல் உதயன் பத்திரிகை நிறுவனத்தை அச்சுறுத்தும் விதமாக வாகனங்களில் ஆட்களை திரட்டி வந்து அராஜக பாணியில் செயற்பட்டுள்ளது. தவறு இருப்பின் சட்டரீதியாக அணுகுவதை விடுத்து அச்சுறுத்தும் வகையில் அணுகுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இந்தச் செயல் பத்திரிகைப் பணியை கேள்விக்குட்படுத்தும் செயலாகும். மதபேதமின்றி ஒற்றுமையாக வாழும் தமிழ் மக்களிடையே இத்தகைய பதற்றத்தை ஏற்படுத்துவதை அனுமதிக்க முடியாது- என்றார். (ச-125)

# ஊடக சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டும்

## "உதயன்" தாக்குதலுக்கு தமிழ்நாட்டு பத்திரிகையாளர் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ்ப்பாணத்திலிருந்து துணிச்சலாக செய்திகளை வெளிப்படுத்துகின்ற 'உதயன்' பத்திரிகை மீது மதக்குழு ஒன்றால் நடத்தப்பட்ட காடைத்தனமான செயற்பாடு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு இந்தியா தமிழ்நாட்டைச் சேர்ந்த பத்திரிகையாளர் வி.எஸ்.இராமன் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

மதத்தின் பெயரால் இடம்பெற்ற அநீதியை தட்டிக் கேட்டமைக்காக ஊடக சுதந்திரத்தை அச்சுறுத்தும் வகையில் மதக்குழு ஒன்று ஊடக அலுவலகத்துக்குள் புகுந்து காடைத்தனமாக செயற்பட்டுள்ளது. ஊடகம் என்பது காலத்தின் கண்ணாடி. இந்த ஊடக தர்மத்தை சிதைக்கும் வகையில் தீய சக்திகள் தோன்றியுள்ளன. இந்தத் தீய சக்திகள் மீது நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வரவேண்டும். ஊடக சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டும்- என்றார். (ச-இ)

# சட்டவிரோதமான மதக்குழுவுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை!

## தியாகராஜா நிரோஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13

உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் நுழைந்து அடாவடித்தனம் மேற்கொண்டு ஊடக சுதந்திரத்தைக்கூட கேள்விக்கு உள்ளாக்கும் அளவுக்கு அச்சுவேலியில் சமயம் என்ற போர்வையில் பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் குழுவினரின் செயற்பாடு அமைந்துள்ளதைக் கண்டிக்கின்றோம் என்று வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

மேற்படி மதக்குழுவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உதயன் ஊடக நிறுவனம் ஜனநாயக விழுமியங்களையும் ஊடக தர்மத்தையும் முன்னெடுக்கும் தமிழ் மக்களின் நிறுவனமாகும். அவ்வாறான பத்திரிகைப் பாரம்பரியம் உள்ள நிறுவனம் வெளியிட்ட செய்தியின் தாக்கத்தை சகித்துக்கொள்ள முடியாதவர்கள் குறித்த பத்திரிகையின் ஊடகப் பயணம் குறித்த வரலாற்றை அறிந்திராதவர்கள் அந்த நிறுவனத்துக்குள் நுழைந்து ஊடக சுதந்திரத்தைச் சவாலுக்கு உட்படுத்த முனைந்துள்ளனர்.

நாங்கள் மதச் சுதந்திரத்துக்கு எதிரானவர்கள் அல்லர். எனினும் சமயம் என்ற போர்வையில் அச்சுவேலியில் அயல் வீட்டின் உரிமையாளரான பெண்ணை அவருடைய அலுவலகத்துக்குள் புகுந்து தாக்கியுள்ளனர். அத்துடன் அரச திணைக்களம் ஒன்றுக்குச் சொந்தமான காணியை மோசடியாகக் கையகப்படுத்தி வைத்துள்ளனர். முன்னாள் ஆளுநரால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு, பிரதேச சபையின் தீர்மானம், பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம் போன்றவற்றிலும் இவர்களை வெளியேற்றுவதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும் அந்தக் காணி திணைக்களம் ஒன்றுக்குச் சொந்தமானது என்றவகையில் அந்தத் திணைக்களம்தான் காணியிலிருந்து குறிப்பிட்ட தரப்பை வெளியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அதனை தடுக்குமளவுக்குச் செல்வாக்குமிக்கதாக இந்த சட்டவிரோதக்குழு செயற்பட்டு வருகின்றது. அவர்கள் குறித்த உண்மைகளை உதயன் பத்திரிகை தொடர்ச்சியாக வெளிக்கொண்டுவந்த நிலையில், இதனைத் தடுக்கும் ஓர் உத்தியாகவும் பத்திரிகை மீதான அச்சுறுத்தலைப் பார்க்கவேண்டியுள்ளது - என்றார். (அ-ம,125)



# மதக்குழுவின் அநாகரிகம்; கிள்ளியெறியப்பட வேண்டும்

## 'உதயன்' மீதான தாக்குதலுக்கு சட்டத்தரணி சிறீகாந்தா கண்டனம்

யாழ்ப்பாணத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் மதப்பிரிவு ஒன்றைச் சேர்ந்த ஒரு குழுவினர் 'உதயன்' அலுவலகத்துக்குள் புகுந்து அடாவத்தனத்தில் ஈடுபட்ட சம்பவம் ஒரு புதிய மதக்கலாசாரத்தின் அநாகரிகமான வெளிப்பாடே. இது முளையிலேயே கிள்ளியெறியப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் சட்டத்தரணியுமான என்.சிறீகாந்தா 'உதயன்' அலுவலகம் மீதான அச்சுறுத்தல் சம்பவம் தொடர்பில் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

மதக்கலாசாரத்தின் பெயரால் வன்முறைச் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் தலையெடுக்கத் தொடங்கியுள்ளன.

எவர் வேண்டுமானாலும் தங்கள் விருப்பத்துக்கேற்ப எத்தகைய மத நம்பிக்கையும் கொண்டிருக்க முடியும். அதில் ஆட்சேபிப்பதற்கு இடமேயில்லை. ஆனால் மத நம்பிக்கையின் பெயரால் அடாவடித்தனத்தை வெளிப்படுத்தி ஊடக சுதந்திரத்தை அச்சுறுத்துவதற்கு எமது மண்ணில் எவரையும் அனுமதிக்க முடியாது. இது ஒரு புதிய மதக்கலாசாரத்தின் அநாகரிகமான வெளிப்பாடே ஆகும். இது முளையிலேயே கிள்ளியெறியப்பட வேண்டும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அனைவரும் கைது செய்யப்படவேண்டும் - நீதிமன்றின் முன்நிறுத்தப்பட வேண்டும். இதனை பொலிஸ்துறை செய்யும் என எதிர்பார்க்கின்றோம்- என்றார். (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டணம் செலுத்தினால்தான் தீயணைப்புச் சேவை என்றல்ல


## மாநகரசபை ஆணையாளர் விளக்கம்

**யாழ்ப்பாணம், ஏப். 13**

**மாநகரசபையின் தீர்மானங்களுக்கமைய தீயணைப்புக்காக சில சந்தர்ப்பங்களில் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. ஆனால் அது தீயணைப்பின் பின்னரே ஆகும். கட்டணத்தைத் தந்தால்தான் தீயை அணைப்போம் என்று எவரும் சொல்ல முடியாது - இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆணையாளர் இ.த.ஜெயசீலன்.**

மாநகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியிலுள்ள தனியார் விடுதியொன்றில் கடந்த சனிக்கிழமை தீ விபத்து ஏற்பட்டது. அதனையடுத்து யாழ்.மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவைத் தொடர்பு கொண்டு விடயத்தைத் தெரிவித்தபோது, கட்டணம் வழங்கினாலே சேவை வழங்கப்படும் என்று தீயணைப்புப் பிரிவு ஊழியர்களால் தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் செய்தியாக வெளிவந்ததையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாநகரசபையின் தீயணைப்புப் படையானது சபையின் தீர்மானத்துக்குட்பட்டு சில இடங்களில் கட்டண அறவீடுகளை மேற்கொள்ளுகின்றது. அதேவேளை தீ விபத்து ஏற்படும் எந்தச் சந்தர்ப்பத்திலும் முதலில் கட்டணம் செலுத்தினால் மாத்திரமே மாநகரசபையின் தீயணைப்புப்படை செயற்படும் என்பது கிடையாது. மாநகரசபையின் அமர்வுகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. ஆனால் அது தீயணைப்பின் பின்னரே ஆகும். மேலும் பொதுமக்கள் தமது அவசர நிலைகளின் பொழுது யாழ்.மாநகரசபையின் தீயணைப்பு சேவை இலக்கங்கள் 0213207777 மற்றும் 0212228888 போன்றவற்றுக்கு அழைப்பு விடுத்து தீயணைப்புச் சேவையை நாடமுடியும் - என்றார். (ம-14,125)



ஈஸ்டர் தினத்தை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு இளையோர்களின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு கடலில் படகோட்டப்போட்டி இடம்பெற்றது. இரண்டு பிரிவுகளாக நடத்தப்பட்ட இந்தப் போட்டி முல்லைத்தீவு செல்வபுரம் கடற்கரையில் இருந்து தீர்த்தக்கரை கடற்கரைவரை சென்று, பின்னர் அங்கிருந்து திரும்பும் வகையில் இடம்பெற்றது. (ச-19)



### புத்தாண்டை முன்னிட்டு

## நந்திக்கடலில் படகுப்போட்டி

முல்லைத்தீவு, ஏப். 13

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை கண்ணகி மாட்டுவண்டி சவாரி சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் விளையாட்டுப் போட்டிகளின் ஒரு பகுதியாக படகோட்டப்போட்டியும், சவாரிப் போட்டிகளும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.சிவமோகன் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு படகோட்டப் போட்டியை ஆரம்பித்து வைத்தார். முதல் இரண்டு இடங்களை முத்தையன்கட்டு நன்னீர் மீன்பிடிச் சங்கத்தைச் சேர்ந்த படகு உரிமையாளர்களும், மூன்றாவது இடத்தை வற்றாப்பளை மீனவ சங்க படகு உரிமையாளரும் தமதாக்கினர்.

அன்றையதினம் மாலை நிகழ்வுகளாக வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்திய மாட்டுவண்டில் சவாரிப் போட்டி, கைத்தறியில் மாடுகொண்டு ஓடுதல் போட்டிகள் களைகட்டின. 5 பிரிவுகளாக மாட்டுவண்டில் சவாரிப் போட்டிகள் நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டன. (ச-19)



தெல்லிப்பழைப் பிரதேசசெயலக ஏற்பாட்டில், சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பிரதேச தொழில் முயற்சியாளர்களின் ஆக்கப் பொருள்கள் விற்பனைக்கூடம், பிரதேசசெயலக மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை பிரதேசசெயலர் ச.சிவசிறியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ம-14,9)



இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன சாவகச்சேரி கிளை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினரால் சாவகச்சேரி மருத்துவமனைக்கு முன்பாக உள்ள பகுதியில் அண்மையில் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ச-9)



எஸ்.சிவலிங்கராஜா

உதயன் - புதன்பொய்கையில் நேற்று புதன்கிழமை வெளியான **'முனைவர் தி.கமலநாதனின் 'சிந்தனை, சொல், செயல்' நூல் அறிமுகம்'** என்ற விமர்சனக் கட்டுரையை எழுதியவர் **பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா.** தொழில்நுட்பக் கோளாறு காரணமாக எழுதியவரின் பெயர் இடம்பெறவில்லை. தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

## முல்லையில் விற்பனைச் சந்தைகள்

யாழ்ப்பாணம், ஏப். 13

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் விற்பனைச் சந்தைகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் 4 பிரதேச செயலகங்களில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலகங்களில் சமுர்த்திப் பயனாளிகளின் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தும் நோக்கில் சந்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும், பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் விற்பனைச் சந்தையை முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் ஆரம்பித்து வைத்தார். (எ-14,19)

# இன்றைய நாள்

## (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக் கூடும். பேசும்போது கவனம் தேவை.

**மிதுனம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். ஆனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரிடும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர் பான முக்கிய முடிவுகளை இன்று எடுக்கலாம். செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் நிறைவேறும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். நன்றாக திட்டமிட்டுக்கொண்டு கவனமாக செயற்படவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு . குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் ஆலோசனை அவசியம்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். விருப்பம் நிறைவேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்தக் கோட்டில் வெட்டுவதன் மூலம் இந்த விளம்பரத்தை தாயம் விளையாடும் அட்டையாகப் பயன்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை தேர் உலா வரும் யாழ் அத்தியடி பிள்ளையார்



**வசந்தமண்டப பூசை - காலை 08.00 மணி**

**தேருக்கு எம்பெருமான் எழுந்தருளல் - காலை 09.00 மணி**

**கோயில் நிர்வாகசபை**

விளம்பர அனுசரணை:

## சிங்கப்பூர் ஜுவலறி

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 271 9372

## பெயர் மாற்றம்

கடற்கரை வீதி, கற்கோவளம், பருத்தித்துறையில் வசிக்கும் **அருட்செல்வம்** ஆகிய நான் எனது பெயரினை இன்றுமுதல் **அன்ரனி அருட்செல்வம்** என மாற்றிக் கொள்வதோடு சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயகக் குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

T.**அன்ரனி அருட்செல்வம்**

(22947)AH-1

## கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் வ/து ஏலவிற்பனை அறிவித்தல்

01) இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு.

02) எமது சங்கத்திற்குச் சொந்தமான குபாட்டா லான்மாஸ்ரர்கள் இரண்டும் ஏல விற்பனை செய்யவுள்ளதால் இதனைக் கொள்வனவு செய்யவுள்ளவர்கள் காரியாலய வேலை நாள்களில் பார்வையிடுவதுடன் மீளளிக்காத கட்டுப்பணம் 1000/= மீளளிக்கப்படும் கட்டுப்பணம் ரூபா 10000/= என்பன செலுத்திப் பற்றுச் சிட்டையினைப் பெற்றுக் கொள்வதுடன் ஏல விற்பனை தொடர்பான பொதுவான அறிவித்தல் கடிதத்தினையும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் கட்டுப்பணம் செலுத்தியவர்கள் மட்டுமே ஏல விற்பனையில் பங்கு பற்ற முடியும்.

03) ஏல விற்பனை திகதி நேரம் 20.04.2023 - 11.00
04) கட்டுப்பணம் செலுத்தும் காலம் 20.04.2023 - 10.00 வரை
05) மேலதிக விபரங்களுக்கு 021 222 3539

**பொதுமுகாமையாளர்,**
**கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**
**K.K.S.வீதி, தாவடிச்சந்தி.**

(CR/39595)AH-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**தோற்றம்** 04 . 04 . 1959

**மறைவு** 15 . 03 . 2023

### அமரர் வேலாயுதம் கருணாகரன்

**(ஓய்வுபெற்ற பொருளியல் ஆசான்)**

குலவிளக்கு அணைந்ததோ!
கூடி மகிழ்ந்த கூட்டம் கலைந்ததோ!
நாம் சிறகொடிந்த பறவைகளாய் நிற்கின்றோம்
நடந்தவை யாவும் கனவாய் இருக்காதா?

நீங்கள் விட்டுச் சென்ற தடங்கள் இன்னும் காயவில்லை
மீண்டும் மீண்டும் நினைவூட்டுகின்றன உங்களை,
கடைசிவரை சந்தோசமாக வாழ்ந்திருப்போம் என்றிருக்க
இடைநடுவில் எமை ஏங்க விட்டு சென்றதேனோ!

**உங்கள் ஆத்மா, சத்யசாமி பகவானின் பாதக்கமலங்களில் சரணடைய பிரார்த்திக்கின்றோம்.**
ஓம் சாந்தி!

**215, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS/49990)AH-1

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### தங்கராசா சிவனேசம்

சூளானை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா சிவனேசம் கடந்த (10.04.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பியப்பா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், தங்கராசாவின் பாசமிகு மனைவியும், ஜெயரூபன் (ஜேர்மனி), கம்ஷிகா (லண்டன்), காலஞ்சென்ற ஜெயரஞ்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கனுஷாவின் (கமநல சேவை திணைக்களம் - கீரிமலை), பெரியதாயும், வதனி (ஜேர்மனி), விஸ்ணபவான் (லண்டன்) மயூரன் (இல.மின். சபை - யாழ். புறநகர்) ஆகியோரின் அன்பு மாமியும், பத்மாவதி, நிர்மலாதேவி, ஈஸ்வரி, அன்னம்மா, கமலாவதி, காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, இலங்கை நாயகி, சாந்தினி, வதனி ஆகியோரின் சகோதரியும், கோபாலப்பிள்ளை, சுப்ரமணியம், தெய்வேந்திரம், துரைராஜசிங்கம், காலஞ்சென்றவர்களான தங்கவேல், செல்வரட்ணம், தங்கம்மா, பூவரசப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும், உஷானுஜா, நிஷாந், மிதுஷா, டினோஜா, நிசானா, டக்சியா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2023) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சுன்னாகம்.** (CS/49989)AH-1 **தகவல்: குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 04 . 12 . 1940

இறப்பு 11 . 04 . 2023

## V.R. கதிரேசு இரத்தினசபாபதி J.P

(ஓய்வு நிலை விவாகப்பதிவாளர்)

நயினாதீவு 8ம் வட்டாரம் அறுகந்தறையை பிறப்பிடமாகவும் யாழ் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட கதிரேசு இரத்தினசபாபதி கடந்த (11.04.2023) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் நயினாதீவை சேர்ந்த காலஞ்சென்றவர்களான கதிரேசு - அன்னபூரணி தம்பதிகளின் பாசமிகு மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான முத்தையா சிவக்கொழுந்து தம்பதிகளின் மூத்த மருமகனும், சண்முகவடிவின் அன்புக் கணவரும், ஓம்சக்தி (ஆசிரியர்.புனித பத்திரிசியார் கல்லூரி), காலஞ்சென்ற ஆதித்தன் மற்றும் ஆதிசக்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநலசேவைகள் நிலையம், புத்தூர்), சிவசக்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் நல்லூர் பிரதேசசபை), மணிகண்டன் (அவுஸ்ரேலியா), ஞானசக்தி (இலங்கை வங்கி, வடபிராந்திய காரியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யசோதன் (சிரேஷ்ர தொழில்நுட்ப உத்தியோகத்தர், தாவரவியல்துறை, யா/பல்கலைக்கழகம்), லோகேந்திரன் (ஆசிரியர், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), சுதாகரன் (முகாமையாளர், இலங்கை வங்கி, வல்வெட்டித்துறை), இராகுலன் (மின் அத்தியட்சகர், இலங்கை மின்சாரசபை, பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிலாந்தி, புராதனி, பார்கவி, பிரணவிகா, சாத்விகா, தாருக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், சாரதாதேவி,சறோஜினிதேவி, சிவஞானசுந்தரம், காலஞ்சென்ற அருளானந்தசிவம் மற்றும் மலராஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கற்பகவடிவு, கிருஸ்ணவடிவு, மரகதவடிவு, திருச்செல்வம், தனலக்ஸ்மி மற்றும் மகாலிங்கசிவம், காலஞ்சென்ற கனகநாயகம் மற்றும் ஸ்ரீலதா, சுசீலாதேவி, பிரேம்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவானந்தராஜா, காலஞ்சென்ற அன்னலிங்கம் மற்றும் சுரேந்திரராசா, சத்தியேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2023) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

30/6, நாவலடி லேன்,
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
0776198548 / 0771446775

(CS/49992)AH-1

தகவல்:
குடும்பத்தினர்.


# அபி பஷன் வேல்ட் இன்

ABI Fashion World

புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி
இச் சலுகை 14.04.2023 வரை மட்டுமே




112, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சந்திரச்சந்திக்கும் பிரதம
தபாலகத்திற்கும் இடையில்)

(விலைக்கழிவுகள் நிபந்தனைகளுக்குட்பட்டது)

0212223738 ரெடிமெற் ஆடைகளின் சங்கமம் abifashionworld


# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 03 . 10 . 1983

உதிர்வு 13 . 04 . 2020

## அமரர் இராமராசா மயூரன்

(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - கோப்பாய்)

மூன்று ஆண்டுகள் சென்றது தம்பி
நீ எங்களைப் பிரிந்து
உன்னை தொலைத்து விட்டு
நாம் இங்கு ஏங்குகின்றோம்.
பாதி வாழ்க்கை வாழ முன்னே
உன்னை இறைவன் அழைத்து விட்டான்
வாடிய மலராய் எப்பவும்
எம் கண்களில் கண்ணீராய்
நீ அமைதியாய் உறங்குகின்றாய்
உன் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்.

(CS 24433)-1

பாடசாலை வீதி,
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

சகோதரர்கள்
மைத்துனர்கள்

# மரண அறிவித்தல்



## திருமதி திலகவதி காசிராசா

குப்பிளான் வடக்கை பிறப்பிடமாகவும் தற்போது புங்குடுதீவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி காசிராசா அவர்கள் கடந்த (11.04.2023) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.க.காசிராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சோமலிங்கம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சோ.சிவலிங்கம், சோ.சீவரத்தினம், சோ.சிவசுப்பிரமணியம் மற்றும் திருமதி சிவஞானாம்பிகை இராஜசேகரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அஜந்தினி, சிவசேகரன், அனுஷினி, செந்தூர்சேகரன் ஆகியோரின் பாசமிகு சிறிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2023) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் (மடத்துவெளி, 8ஆம் வட்டாரம், புங்குடுதீவு) இடம்பெற்று புங்குடுதீவு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

8ஆம் வட்டாரம்,
மடத்துவெளி,
புங்குடுதீவு,

(CS 24302)K-1)

தகவல்:
குடும்பத்தினர்
0767438318

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10.04.1933 | 12.04.2023 |



## திருமதி தாமோதரம்பிள்ளை சின்னம்மா

வாகையடி மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தாமோதரம்பிள்ளை சின்னம்மா அவர்கள் நேற்று (12.04.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு தாமோதரம்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி வள்ளிப் பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான பரமு மாரிமுத்து தம்பதி யரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா, தங்கம்மா, சின்னையா, அன்னம்மா, பொன்னுத்துரை ஆகியோரின் சகோதரியும், விசாலாட்சி, மீனாட்சி, இராசம்மா, வீரலட்சுமி, தேவராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், மனோன்மணி யின் அன்புத் தாயாரும், அமரர் கமலேஸ்வரனின் அன்பு மாமியாரும், கஜேந்தினி, கஜறூபினி, கஜிக்காந், மகிந்தன், சாமினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அக்சயனின் பூட்டியும், மகாதேவன், அன்னலட்சுமி, ஜிரோஸ் ஆகியோரின் அன்பு வளர்ப்பு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வாகையடி வீதி, மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்
(077 162 0970, 021 205 7628)

(CS 24443) A-1

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01.03.1947 | 12.04.2023 |



## மார்க்கண்டு குமாரசாமி

(ஓய்வுநிலை மருந்தாளர், யாழ். போதனா வைத்தியசாலை)

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு குமாரசாமி நேற்று (12.04.2023) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், நடராசா சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், சறோஜாவின் அன்புக் கணவரும், பிரபாகரன் (ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ் கூட்டுத்தாபனம்), சிவாகரன் (பொறியியலாளர் நீர்ப்பாசன திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாமினி, சௌமினி ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி சிவஞானவதி -விஸ்வலிங்கத்தின் (ஓய்வுநிலை அதிபர்) பாசமிகு சகோதரரும், சாயிபிரியன், சாயிவர்சனா, யாதவி, யாதவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிரபாகரன்- 0777 6099 29

தகவல்:
குடும்பத்தினர்

(CS 24421)

# சடுதியாக உயர்ந்தது கோழி இறைச்சி விலை

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கோழி இறைச்சியின் விலை சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளது என நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

பண்டிகைக் காலத்தில் கோழி இறைச்சிக்கான கேள்வி அதிகரித்துள்ளமையால் இந்த விலையுயர்வு நிகழ்ந்துள்ளது.

கடந்தவாரம் ஆயிரத்து 100 ரூபா தொடக்கம் விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் கோழி இறைச்சி இந்த வாரம் ஆயிரத்து 400 ரூபா தொடக்கம் ஆயிரத்து 600 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. இதேவேளை ஆயிரத்து 300 ரூபாவை விட அதிக விலைக்கு கோழி இறைச்சியை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-இ)

# மருந்தகத்திற்கு மருந்தாளர் தேவை

Pharmacist இலங்கை மருத்துவ சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வைத்திருக்கும் மருந்தாளர் தேவை. (ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்). சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

(CS23319) (3/6)

**077 151 4842, 075 468 4153**

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை **திருமதி A.J. யசோதன்** அவர்களின் அன்புத் தந்தை

**க.இரத்தினசபாபதி**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் சங்கம்,**
**புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

(CR/ 39637)AH-1

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை **திருமதி A.J. யசோதன்** அவர்களின் அன்புத் தந்தை

**க.இரத்தினசபாபதி**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**புனித பத்திரிசியார் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

(CR/ 39638)AH-1

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 28.02.2023 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது

அன்புச் செல்வம்
அமரர்

## இரத்தினேஸ்வரன் பவிதன்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (13.04.2023) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



மலர்வு 08.09.2000 உதிர்வு 28.02.2023

**குடும்பத்தினர்.**
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

(CS/24423)AH

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சீவரட்ணம் மனோரஞ்சிதமலர் (மணி அக்கா)



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10.01.1945 | 13.04.2015 |

திதி: 16.03.2023 அமிர்தசித்த தசமி

புன்முறுவல் காட்டியே
முகமன் செய்யும் வடிவம்
குறுநகை ததும்ப உரையாடிடும்
குணக்குன்றம்
சுறுசுறுப்புடன் சுயமாக
உதவிடும் சுந்தர உருவம்
நினைவைத் தொழுது
துயர் பகிர்வைத் தொடர்வோம் யாம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

182, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகப்பை, சப்பாத்து விலைகள் குறையும்!

கொழும்பு, ஏப். 13

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகள் மற்றும் சப்பாத்துக்களின் விலைகளை விரைவில் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

டொலரின் பெறுமதி வீழ்ச்சியுற்றமைக்கு அமைவாக உள்நாட்டு சந்தையில் பாடசாலை புத்தகப் பைகள் மற்றும் சப்பாத்துகளின் விலைகளைக் குறைக்கவேண்டும். இதுதொடர்பில் ஆராய்ந்து ஒருவாரத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சந்தை மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களத்துக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. விரைவில் அவற்றின் விலைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# சிறுபான்மைச் சமூகங்களுக்கு எல்லை நிர்ணயத்தால் பாதிப்பு

## எல்லை நிர்ணயக் குழு ஏற்பு



**கொழும்பு, ஏப். 13**

**எல்லை நிர்ணய நடவடிக்கைகளின்போது சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்கின்றோம். தொகுதிக் குறைப்புப் பணியில் இதைத் தவிர்க்க முடியாது என்று எல்லை நிர்ணயத்துக்கான தேசிய குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8 ஆயிரத்திலிருந்து 4 ஆயிரமாகக் குறைக்கும் நோக்கில் எல்லை நிர்ணயக் குழு கடந்த வருடம் நியமிக்கப்பட்டது. அதற்கமைய எல்லை நிர்ணயத்துக்கான தேசிய குழுவின் முதற்கட்ட அறிக்கை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. எல்லை நிர்ணயத்துக்கான தேசிய குழுவின் பதவிக்காலம் இம்மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் எல்லை நிர்ணயப் பணிகளுக்காக எடுக்கப்பட்ட செயன்முறைகள், முன்மொழிவுகள், கருத்துக்கள், குழுவின் அவதானிப்புக்கள், பரிந்துரைகள் என்பவற்றை உள்ளடக்கிய அறிக்கை எதிர்வரும் மே 2ஆம் திகதி பிரதமரிடம் கையளிக்கப்படவுள்ளது. இதுகுறித்து சுமார் 15 பரிந்துரைகள் மாத்திரமே கிடைத்தன. தொகுதிகள் குறைக்கப்படும் போது சில சிறுபான்மை மக்கள் குழுக்களுக்கு பாதகம் ஏற்படும் என அரசியல் கட்சிகள் தெரிவித்துள்ளன. இவ்வாறு அநீதி இழைக்கப்படுகிறது என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம் - என்றார். (ச-இ)

## பொலித்தீன் பைகளுக்கு நுகர்வோரிடம் கட்டணம்

### சட்டத்திருத்தம் விரைவில்

கொழும்பு, ஏப். 13

பொலித்தீன் பைகளுக்காக நுகர்வோரிடம் கட்டணம் அறவிடும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டுவருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறப்பு அங்காடிகளில் பொருள்களை கொள்வனவு செய்யும்போது கட்டுப்பாட்டை மீறி பொலித்தீன் பைகள் விநியோகிக்கப்படுகின்றன. அதனால் சுற்றாடலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது. இதனை தவிர்க்கும் முகமாக பொலித்தீன் பைகளுக்கு நுகர்வோரிடம் கட்டணத்தை அறவிடுவதற்கான சட்டத்திருத்தத்தை மேற்கொண்டு பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது என சுற்றாடல் அமைச்சின் செயலாளர் சிறப்பு மருத்துவர் அனில் ஜயசிங்க தெரிவித்தார். (ச-இ)

## குரங்குத்தொல்லை எதிரொலி

## 100,000 குரங்குகள் சீனாவுக்கு வழங்கல்

கொழும்பு, ஏப். 13

இலங்கையில் குரங்குத்தொல்லை அதிகரித்துவரும் நிலையில், அதைக் கட்டுப்படுத்துவதற்காக முதற்கட்டமாக சுமார் ஒரு லட்சம் குரங்குகளை சீனவுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தற்போது நாட்டில் குரங்குகளின் தொகை 30 லட்சத்தை கடந்துள்ளது. பயிர்ச்சேதத்தை ஏற்படுத்தும் விலங்குகளில் குரங்கு முதன்மையானது. இந்நிலையில் சீனாவிலுள்ள மிருகக்காட்சிச் சாலைகளுக்கு இலங்கைக் குரங்குகளை வழங்குமாறு சீன பிரதிநிதிகள் குழுவொன்று விவசாய அமைச்சிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது. இந்தக் கோரிக்கையின் பிரகாரம் முதற்கட்டமாக ஒரு லட்சம் குரங்குகளை வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மதுபான நிலையங்கள் இன்று, நாளை மூடல்!

கொழும்பு, ஏப். 13

தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் நாட்டிலுள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்படவுள்ளன என்று கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சட்டவிரோத மதுவிற்பனை தொடர்பில் சுற்றிவளைப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி எதிர்வரும் 31 ஆம் திகதி வரை இந்த சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அத்துடன் 1913 என்ற துரித தொலைபேசி இலக்கத்தினூடாக சட்டவிரோத மதுபான விற்பனை மற்றும் தயாரிப்புத் தொடர்பில் தகவல் வழங்க முடியும் என்றும் கலால் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-14,இ)

## பாதுகாப்பு, நிதி, பொருளாதாரம்

## சர்வதேச மாநாடு டில்லியில் ஆரம்பம்

### இலங்கை பங்கேற்பு

கொழும்பு, ஏப். 13

பாதுகாப்பு, நிதி மற்றும் பொருளாதாரம் குறித்த 3 நாள் சர்வதேச மாநாடு இந்திய தலைநகர் புதுடில்லியில் நேற்று ஆரம்பமாகியது.

இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், இந்த மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

இந்தியப் பாதுகாப்பு மற்றும் நிதியமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டில், பாதுகாப்பு, நிதி மற்றும் பொருளாதாரம் குறித்த நுண்ணறிவு மற்றும் அனுபவங்களை பகிர்ந்துகொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், அவுஸ்திரேலியா, பங்களாதேஷ் மற்றும் கென்யா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர். (ச-இ)

## திறன் விருத்திப் போட்டிகள்

சாவகச்சேரி, ஏப். 13

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் 'மாண்புறு மாணவர் சமுதாயம்' என்னும் திறன் விருத்திப் போட்டிகள், தென்மராட்சி பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் 21ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பேச்சு, கட்டுரை, சுவரொட்டிச் சித்திரம் ஆகிய போட்டிகள் மத்திய பிரிவு, மேற்பிரிவு என இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பப்படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. போட்டிகளில் பங்கேற்க விரும்பி, இதுவரை விண்ணப்பிக்காத மாணவர்கள் தமது பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பங்களை உடனடியாக பிரதேச கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14,9)

## அரச மருந்தகங்களால் 5 கோடி ரூபா இழப்பு!

### தேசிய கணக்காய்வு அலுவலகம் தகவல்

கொழும்பு, ஏப். 13

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 50 அரச மருந்தகங்களில், 26 அரச மருந்தகங்களின் தேவையற்ற செலவுகளால் சுமார் 5 கோடியே 32 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10 மருந்தகங்களின் இழப்பு 15 இலிருந்து 175 வீதம்வரை அதிகரித்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் இரத்தினபுரி, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, பண்டாரகம மற்றும் மொனராகலை ஆகிய நான்கு அரச மருந்தகங்கள் இலாபமீட்டியிருந்த நிலையில் 2021 ஆம் ஆண்டில் நட்டத்தைச் சந்தித்துள்ளன. ஊழியர்களின் செலவுகள் 10 முதல் 32 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதேவேளை ஸ்ரீ ஜயவர்த்தனபுர மருந்தகத்தின் ஊழியர்களின் அதிகபட்ச செலவே அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் இழப்பை நேரடியாகப் பாதித்துள்ளது - என்றுள்ளது. (ச-இ)

## மத்திய வங்கியிலிருந்து ரூ.50 லட்சம் 'மாயம்'

### விசாரணை ஆரம்பம்

இலங்கை மத்திய வங்கியிலிருந்து 50 லட்சம் ரூபா காணாமற்போயுள்ள நிலையில், அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கை மத்திய வங்கியின் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 50 லட்சம் ரூபாவே இவ்வாறு காணாமற்போயுள்ளது. இதுதொடர்பில் மத்திய வங்கி அதிகாரிகளால் கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவம் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் பாதுகாப்புத் தரப்பினரும் கோட்டை பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிவரை போராடியும் தோற்றது சீ.எஸ்.கே.



சென்னை, ஏப்ரல் 13
சென்னை சிதம்பரம் மைதானத்தில் நேற்று நடைபெற்ற விறுவிறுப்பான ஐ.பி.எல். ஆட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சீ.எஸ்.கேயை வெற்றிகொண்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற சி.எஸ்.கே. அணித்தலைவர் டோனி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார். இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ராஜஸ்தான் ரோயல்ஸ்அணி ஜோஸ் பட்லரின் அரைச்சதத்தின் உதவியுடன் 175 ஓட்டங்களைப் பெற்றது. அவர் 36 பந்துகளை எதிர்கொண்டு 51 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மொயீன் அலியின் பந்தில் நேரடியாக இலக்கு தகர்க்கப்பட்டு ஆட்டமிழந்து வெளியேறினார். படிக்கல் 26 பந்துகளில் 38 ஓட்டங்களையும் அஸ்வின், ஹெட்மயர் தலா 30 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக்கொடுக்க இந்த ஓட்ட எண்ணிக்கையை அடைந்தது ராஜஸ்தான் அணி.

176 என்ற ஓரளவு இலகுவான வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய சென்னை அணிக்கு ஹெய்க்வாட் 8 ஓட்டங்களுடன் ஏமாற்றமளித்தாலும் கொன்வே மற்றும் ரகானே இணை சிறப்பாக ஓட்டங்களைக் குவித்தனர். இவர்கள் இருவரினதும் ஆட்டம் நிறைவுக்கு வர சீ.எஸ்.கே.வின் வெற்றி கேள்விக்குறியானது. மத்திய வரிசை வீரர்கள் ஒற்றையிலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 15 ஓவர்கள் முடிவில் 113 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து சரிவுகண்டது. இறுதி இரண்டு ஓவர்களில் வெற்றிக்காக 40 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் சீ.எஸ்.கேவின் இரு பெருந்தூண்களான ஜடேஜா மற்றும் டோனி களத்திலிருந்தனர். வெற்றிக்காக இருவரும் கடுமையாகப் போராடிய போதிலும் 3 ஓட்டங்களால் வெற்றியை நழுவவிட்டனர். ராஜஸ்தான் சார்பாக அஸ்வின், சகால் தலா 2 விக்கெட்டுக்களையும் சந்தீப் சர்மா மற்றும் சாம்பா தலா ஓர் விக்கெட்டையும் வீழ்த்தினர். அஸ்வின் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ஒ-ரி1)

## உதயன் பத்திரிகை மீதான வன்மம் ஜனநாயகத்துக்கான அச்சுறுத்தல்

### யாழ். ஊடக அமையம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 13
'உதயன்' பத்திரிகை நிறுவனத்தினுள் மத அமைப்பொன்றைச் சேர்ந்த போதகர் தலைமையில் கும்பலொன்று அத்துமீறி அடாவடியில் ஈடுபட்டமையானது ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும் -இவ்வாறு யாழ். ஊடக அமையம் நேற்று விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
ஜனநாயகத்தின் நான்காவது துணாகக் கருதப்படும் ஊடகத்தை அச்சுறுத்திப் பணியவைக்கலாம், வன்முறை வழியில் கட்டுப்படுத்தலாம் என யாராவது எண்ணினால் அது சாத்தியமற்றதாகும்.

போர்ச் சூழலிலும் போருக்குப் பின்னரும் பெரும் நெருப்பாறுகளைக் கடந்து வந்த தமிழ் ஊடகங்களை அச்சுறுத்திப் பணிய வைக்கமுடியும் என ஒரு சிறு கும்பல் கருதினால் அது மலையை வெறும் கையால் குடைவதற்கு ஒப்பானதாகும்.

எனினும் இவ்வாறான கும்பல்களின் ஜனநாயக விரோதச் சம்பவங்களை, ஜனநாயகத்துக்காகப் போராடும் ஊடகங்கள் மீதான அச்சுறுத்தல்களை சாதாரணமாகக் கடந்துவிட முடியாது. இவ்வாறான ஜனநாயக விரோதக் கும்பல்கள் கண்டிக்கப்படவேண்டியவை. அத்துடன், தண்டிக்கப்பட வேண்டியவை.

'உதயன்' பத்திரிகை மீதான இந்தச் சிறு கும்பலின் இந்த அடாவடியை யாழ்.ஊடக அமையம் வன்மையாகக் கண்டிக்கிறது. வன்முறையாளர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவதன் ஊடாக இவ்வாறான ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு முடிவுகட்ட வேண்டுமென யாழ்.ஊடக அமையம் அழைப்புவிடுக்கிறது - என்றுள்ளது. (அ-ஒ.20)

## ரயில் நிலையத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய கும்பல்

கிளிநொச்சி, ஏப். 13
பரந்தன் ரயில் நிலையத்துக்குள் குழுவொன்று புகுந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தாக்குதல் மேற்கொண்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ரயில் நிலையத்துக்குள் மதுபானம் அருந்திய குழுவினரிடம், இங்கு மதுபானம் அருந்தவேண்டாம் என ரயில் நிலைய ஊழியர்களால் கூறப்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த குழு, ரயில் நிலைய ஊழியர்களைத் தாக்கிக் காயப்படுத்தியதுடன், ரயில் நிலைய உடைமைகளையும் சேதப்படுத்திச்சென்றது. தாக்குதலில் ரயில் நிலைய அதிபர் உட்பட இருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தாக்குதல் தொடர்பான சந்தேகநபர்களைக் கைது செய்ய விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஒ,14,113)

## இணுவில் சனசமூக நிலைய ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 13
இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நூல நிலைய கலாசார மண்டபத்தில் தலைவர் எஸ்.புரந்தரா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பிரதி நூலகர் கலாநிதி கல்பனா சந்திரசேகர், இணுவில் மேற்கு கிராம அலுவலர் இ.ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி, சதுரங்கப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் வெற்றிக்கேடயங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

தொடர்ந்து பொருளாதாரம் நலிவுற்ற குடும்பமொன்று இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் திருநெறிய தமிழ்மறை கழகத்தால் தையல் இயந்திரமொன்றும் கையளிக்கப்பட்டது. (ச)

## விசேட தேவையுடையோருக்கு யாழில் இசைப் போட்டிகள்

வடக்கு மாகாண மாற்றுத்திறனாளிகளின் இசை திறமையை வெளிக்கொணரும் முகமாக முதன்முறையாக விசேட தேவையுடையோருக்கான இசைபோட்டி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது. இந்த இசைப் போட்டி சாவிகா சங்கீத அறிவாலயத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் சனிக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

போட்டி இடம்பெறும் அன்றைய தினம் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை பதிவுகளை மேற்கொள்ளவும், தனிப்பாடல், தனிவாத்திய இசைக்கே போட்டியாளர்கள் அனுமதிக்கப்படுவர். போட்டியாளர்கள் தமக்கு விருப்பமான ஏதாவது ஒரு பாடலை (கர்நாடக சங்கீதம், திரையிசை, மேலைத்தேயம்) 6 இசைக்கமுடியும். வாத்தியம் இசைப்போர் வாத்தியக்கருவியைக் கொண்டுவருதல் வேண்டும். (ச-இ)

# சீரணி ஆலயத்தின் மஹோற்சவத்தை தடையின்றி நடத்துமாறு போராட்டம்



யாழ்ப்பாணம், ஏப். 13
சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை தடையின்றி நடத்துமாறு வலியுறுத்தி ஆலயத்தின் முன்பாக போராட்டமொன்று நேற்றுப் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆலய மஹோற்சவத்தை நடத்துவதற்கான அனுமதி உரிய தரப்பினரால் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தும், தடையின்றி மஹோற்சவத்தை நடத்துமாறு வலியுறுத்தியும் ஆலய அடியவர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்;

கடந்த வருடங்களில் சீரணி நாக பூஷணி அம்பாள் ஆலய மஹோற்சவத்தைச் சிறப்பாக நடத்துவதற்கான அனுமதியை உரிய தரப்பினர் வழங்கியிருந்தனர். இந்த வருட மஹோற்சவத்துக்கான அனைத்துப் பூர்வாங்க ஏற்பாடுகளும் இந்து இளைஞர் மன்றத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் உரிய தரப்பினரால் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. தனிப்பட்ட காரணத்துக்காக ஒரு சிலர் இந்த ஆலயத்தின் மஹோற்சவத்தைத் தடுக்கின்றனர். இது தொடர்பாக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கொன்றும் கடந்த பல வருடங்களாக நிலுவையிலிருந்த நிலையில் வாதப் பிரதிவாதங்கள் நிறைவுற்று வழக்கு விசாரணை கடந்த வருடம் நிறைவுக்கு வந்துள்ளது. எனினும் இறுதித் தீர்ப்பு இன்னமும் வழங்கப்படவில்லை. எங்கள் ஊர் ஆலயத் திருவிழாவை நடத்துவதற்காக நாங்கள் ஒவ்வொரு வருடமும் போராடிக் கொண்டிருக்க முடியாது. உரிய தரப்பினர் அம்பாளின் மஹோற்சவத்தைத் தடையின்றி நடத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் - என்றனர். (ஒ,14,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக சுதந்திரத்தை முடக்க அரசாங்கம் புதிய முயற்சி

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை மேலும் வலுப்படுத்தும் விதமாக ஊடக அடக்குமுறைக்காக ஒலிபரப்பு அதிகார சட்டமொன்றையும் அரசாங்கம் கொண்டுவர முயற்சிக்கின்றது. இதன் ஊடாக சுதந்திர ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்கு அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தகவல் அறியும் உரிமை மற்றும் ஊடக சுதந்திரத்துக்கு எதிரான கடுமையான நடவடிக்கையாகும். இதன் ஊடாக அரசாங்கத்துக்குக் கீழ்படிந்து இணங்கும் பொம்மை ஊடகக் கலாசாரத்தை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதேச்சாதிகார சர்வாதிகார ஒலிபரப்பு அதிகாரசபை சட்டத்தைக் கொண்டு வந்து நாட்டின் ஊடகங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தலை உடனடியாக நிறுத்துவதற்கு முன்னின்று செயற்படுகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ,14,இ)

### 3 கட்டங்களாக...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத்தில் ஏனைய கட்சிகளின் ஆதரவுடன் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த இணக்கப்பாட்டுக்கு வருவதே குழுவின் முதற்கட்ட நடவடிக்கை.

தொடர்ந்து அனைத்துத் தரப்பினருடனும் கலந்தாலோசித்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சர்வதேச தரத்துக்கு ஏற்ப கொண்டுவருவது இரண்டாவது நடவடிக்கை.

இதேநேரம் பொறுப்புக்கூறல் நடவடிக்கைக்காக உண்மையைக் கண்டறியும் உள்ளகப் பொறிமுறையை நிறுவுவது உபகுழுவின் மூன்றாவது நடவடிக்கை.

இன நல்லிணக்கச் செயற்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கி, நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கி அதனூடாக அபிவிருத்தி அடைவதே ஜனாதிபதியின் நோக்கம் - என்றார். (அ-ஓ,இ)

### தீவிரமான...

திணைக்களத்தால் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக ஆராயும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கிலுள்ள சகல பிரதேச செயலர்களுக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களத்தால் பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், பதிவு செய்யப்பட்ட, தற்காலிகமாக அனுமதி வழங்கப்பட்ட பகல் பராமரிப்பு நிலையங்கள், தற்காலிகமாக அனுமதி வழங்கப்பட்ட விடுதிகள் ஆகியவற்றின் விவரம் பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அவ்விவரங்களில் கிராம அலுவலர் பிரிவுகளில் இயங்கும் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பற்றிய விவரங்களுக்கு மேலதிகமாக, ஏதாவது நிலையத்தில் சிறுவர்கள் தங்கவைக்கப்பட்டிருந்தால் அந்த நிலையத்தில் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டுவரும் சிறுவர்கள் தொடர்பாகவும், அதன் நிர்வாகம் தொடர்பாகவும் கிராம அலுவலர் மூலமான விவரங்களைப் பெற்று அனுப்பிவைப்பதுடன் எதிர்காலங்களில் தாங்கள் அனுப்பியுள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், பாலர் பகல் பராமரிப்பு நிலையங்கள், விடுதிகள் தவிர ஏதாவது புதிதாக இயங்க ஆரம்பித்திருப்பின் அவை பற்றிய விவரங்களை உடனுக்குடன் எமக்கு அனுப்பி வைக்குமாறும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஓ,5)

### ஈழத்தின்...

லிருந்து 4 தசாப்தங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் பணியாற்றிய அவர் நோய் காரணமாக உயிரிழந்தார்.

'உதயன்' பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் வவுனியா மண்ணிலிருந்து மாவட்டச் செய்தியாளராகப் பணியாற்றினார். பின்னர் அங்கிருந்து 'உதயன்' பத்திரிகைக்கு தகவல் வழங்கும் ஒருவராகவும் செயற்பட்டிருந்தார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் 'வீரகேசரி' ஊடகத்திலும் அவர் பணியாற்றினார். அத்துடன் சர்வதேச ஊடகமான பி.பி.சி.யில் நீண்ட காலம் பணிபுரிந்தார். போர்க்காலத்தில் அவர் பி.பி.சி. தமிழோசையில் தொடர்ச்சியாக தாயக நிலைமைகளை உயிர்அச்சுறுத்தலுக்கும் மத்தியிலும் வெளிக்கொண்டு வந்தார்.

கடந்த முதலாம் திகதி தனது 76ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடியிருந்த நிலையில் கடந்த சில நாள்களாக நோயால் அவதியுற்ற அவர் நேற்று உயிரிழந்தார். (அ-ஓ,110)

### போர்க்காலக்...

அவர். அந்த ஆன்மா இன்று நிரந்தர ஓய்வு எடுத்துக்கொண்டுள்ளது - இவ்வாறு 'உதயன்' குழுமத் தலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள இரங்கல் அறிக்கையில்;

இலங்கையில் போர் நடைபெற்ற காலம் எப்படி இருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். போரில் முதலில் கொல்லப்படுவது உண்மை. அந்த உண்மையைச் சொல்லும் ஊடகவியலாளர்களை மாத்திரம் எப்படி விட்டுவைப்பார்கள்? அப்படிப்பட்ட காரிருள் காலத்தில் வவுனியா மண்ணிலிருந்து, எமது பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட 1985ஆம் ஆண்டில் எங்களுக்கும், சர்வதேச ஊடகங்களுக்கும் செய்தி வழங்கிக் கொண்டிருந்தார். போரில் ஈடுபட்ட இரண்டு பிரதான தரப்புக்களையும் தவிர அரசாங்கப் படைகளுக்கு ஒட்டுக்குழுக்களுக்காகவும் பலர் வவுனியாவிலும் இயங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரது அச்சுறுத்தல்களையும் கடந்துதான் பணியாற்ற வேண்டியிருந்தது. அவரது செய்தியறிக்கையிடல்களால் உண்மைகள் அம்பலமானதால் சீற்றமடைந்த ஒட்டுக்குழுக்கள் பொய்யான வழக்கில் அவரைச் சிலகாலம் சிறைவைத்தன. ஆனாலும், மாணிக்கவாசகம் அசரவில்லை. அவர் நெஞ்சுறுதியுடன் தனது பேனாவுக்கு விசுவாசமாகத் தொடர்ந்தும் உண்மைகளை உரைத்தார்.

போர்க்காலத்தில் தினமும் இரவுவேளைகளில் மாணிக்கவாசகத்தின் குரல் பி.பி.சி. தமிழோசை வழியாக ஒலிக்கும். அவர் வழங்கிய பெட்டகம் நிகழ்ச்சிகள் பல உண்மைகளை உலகின் கவனத்துக்கு எடுத்துச்சென்றன.

இப்படிப்பட்ட ஓர் ஆளுமை இன்று எங்களிடமிருந்து விடைபெற்றுச்சென்று விட்டார். அவர் காட்டிய பாதை எதிர்கால ஊடகப் பணியாளர்களுக்கு ஒரு தடம் - என்றுள்ளது. (அ-ஓ,5)

### இன்னமும்...

செய்வது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என பல்கலைக்கழக பேராசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை - கடந்த ஒன்றரை மாதங்களில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துடன் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டு சங்கம் முன்வைத்த சில பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்பட்டதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரைகளை மீண்டும் தொடங்கும் பேராசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் முடிவுக்குத் தனது பாராட்டுகளையும் தெரிவிப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது. (அ-ஓ,இ)

### உண்ணாவிரதப்...

வரை நல்லை ஆதீன முன்றிலில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தமிழர் தாயகம் தழுவிய மாபெரும் கையெழுத்துப்போரும் முன்னெடுக்கப் படவுள்ளது.

இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில்;

அழிக்கப்பட்ட வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோவில் சிவலிங்கம், தெய்வ சிலைகள் உடனடியாக மீள் நிர்மாணம் செய்யப்படவேண்டும். நீதியான விசாரணை துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்.

குருந்தூர் மலை, கன்னியா வெந்நீரூற்று ஆதிசிவன் வழிபாட்டு உரிமைகள் உடனடியாக மீள வழங்கப்படுவதுடன் புதிய பௌத்த கட்டுமானம் மற்றும் பௌத்த தொல்லியல் புதிய வர்த்தமானி இரத்து நடைமுறையில் செயற்படுத்தப் படவேண்டும்.

இன, மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் தமிழர் தாயகத்தின் தொன்மங்களை, மரபுரிமைகளை மாற்றியமைக்கும் தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

மட்டக்களப்பு, மயிலத்தனைமடு மேய்ச்சல் தரையில் பெரும்பான்மை இன மக்களின் ஆக்கிரமிப்புக்கள் சகலதும் நிறுத்தப்பட்டு தமிழ் பண்ணையாளர்களின் மரபுரிமையான மேய்ச்சலுக்கான வாழ்வுரிமை உறுதிப்படுத்தவேண்டும்.

போருக்குப் பிந்திய இன மதப்பரம்பலை மாற்றி அமைக்கும் திட்டமிட்ட குடியேற்றம் உள்ளிட்ட செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

ஆகிய பிரதான கோரிக்கைகளை முன்வைத்து மாபெரும் அடையாள உண்ணாநோன்புபோராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது. மரபுரிமைகளை வென்றெடுக்க ஆன்மீகத் தலைவர்கள், ஆலய அறங்காவலர்கள், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், சமூக மட்ட அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக சமூகம் ஆகியவற்றின் பங்குபற்றலுடன் முன்னெடுக்கப்படும் இந்த எழுச்சிப் போராட்டத்தின் மூலம் தமிழர் மரபுரிமைகளை வென்றெடுக்க தமிழ் மக்கள் திரண்டு வந்து பங்கெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த காலங்களில் பல கால அவகாசங்கள் வழங்கப்பட்டு, ஏமாற்றப்பட்ட நிலையில் உரிய தீர்வு உடனடியாக வழங்கப்படாவிடுத்து தொடர் போராட்டங்களை பல்வேறு பரிணாமங்களில் முன்னெடுக்கப்படும் என்பதை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் இச்சந்தர்ப்பத்தில் ஆழமாக வலியுறுத்தி நிற்கின்றோம் - என்றுள்ளது. (அ-ஓ,125)

### மருத்துவக்...

கர்ப்பிணிப்பெண் ஒருவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் பிரசவத்துக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் குழந்தை கர்ப்பப்பையிலேயே இறந்துவிட்டதாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்றுப் புதன்கிழமை பருத்தித்துறை இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா, விசாரணை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டிருந்தார்.

'ஊசிமூலம் மருந்துகள் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து மருத்துவர்களின் கண்காணிப்பின்மை காரணமாக கர்ப்பப்பை வெடித்து குழந்தைக்குப் போதிய அளவு குருதி செல்லாமை காரணமாகவே உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக' உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இறப்பு விசாரணை அதிகாரி மேலதிக விசாரணைக்காக பருத்தித்துறை நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தியுள்ளார். (அ-ஓ,26)

### புத்தாண்டு...

நாளை சித்திரைப் புத்தாண்டு பிறக்கவுள்ளது. பண்டிகையை முன்னிட்டு மஹிந்த ராஜபக்சவின் குடும்பத்தினர் பலகாரங்கள் தயாரிக்கும் காணொலியே தற்போது வெளியாகியுள்ளது.

அந்தக் காணொலியில் மஹிந்தவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ச பலகாரங்களைப் பொரிக்கின்றார். மஹிந்த அருகில் இருந்து பார்வையிடுகின்றார். மஹிந்த ராஜபக்சவின் மூத்த புதல்வன் நாமல் ராஜபக்ச தனது குழந்தையுடன் அதிலிருந்து பலகாரங்களை உண்ணும் காட்சிகள் அதில் பதிவாகியுள்ளன. (அ-ஓ,இ)

### யாழ்ப்பாண...

லுள்ள நடைபாதை விற்பனை நிலையங்கள், யாழ். மத்திய பேருந்து நிலையத்துக்கு அருகிலுள்ள நடைபாதை விற்பனை நிலையங்களில் பெருமளவான மக்கள் நேற்றுத் திரண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

அதேபோன்று சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி நகரப் பகுதிகளிலுள்ள கடைகளிலும் மக்கள் பெருமளவில் திரண்டு ஆர்வத்துடன் புத்தாண்டு ஆடைக் கொள்வனவில் ஈடுபட்டனர்.

பொருளாதார நெருக்கடி ஒருபுறம் தொடர்ந்தாலும் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளைவிட இம்முறை அதிகளவில் மக்கள் ஆடைக்கொள்வனவில் நாட்டம் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ,17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விடுமுறை சுற்றுப்பயணம் விவரங்களை பகிராதீர்கள்

### பொலிஸார் அறிவுறுத்து

கொழும்பு, ஏப்.13

ஏப்ரல் விடுமுறை காலத்தின்போது வெளிப்புற சுற்றுப்பயணங்களை மேற்கொள்வோர் அதுதொடர்பான விவரங்களை சமூக ஊடகங்களில் பகிர்வதைத் தவிர்க்கவேண்டும் எனப் பொலிஸார் கோரியுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் குழுக்கள் பகிரப்படும் தகவல்களைப் பயன்படுத்தி வீடுகளில் கொள்ளையிடுதலில் ஈடுபடலாம். வீடுகளை விட்டு வெளியேறுபவர்கள் தங்கள் சி.சி.ரி.வி கமராக்களை இயக்கத்தில் வைத்திருக்க வேண்டும் என்றும், கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்க காட்சிகளை தொடர்ந்து கண்காணியுங்கள் என சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ச-இ)

# கொள்ளையில் ஈடுபட்ட நபரொருவர் கைதானார்!

### அவரைப் பாதுகாக்க முற்பட்டமேலும் 7 பேர் மடக்கிப்பிடிப்பு

கிளிநொச்சி, ஏப். 13

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறுப் பகுதியில் பல்வேறு திருட்டுக்களில் தொடர்புடைய சந்தேகநபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

கடந்த வாரம் வீடொன்றை உடைத்து தொலைக்காட்சி உட்பட மின் உபகரணங்கள் பலவற்றை திருடியமை, கடந்த வெள்ளிக்கிழமை விசுவமடு பகுதியில் ஒருவரைத் தாக்கி அவரிடமிருந்து தங்கச்சங்கிலியை கொள்ளையிட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களால் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக் கமைய விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேகநபரை நேற்று முன்தினம் கைதுசெய்தனர். அவர் 'ஹைஏஸ்' வாகனமொன்றில் பயணித்தபோதே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவருடன் வாகனத்தில் பயணித்த 4 பெண்கள் உள்ளிட்ட ஏழு பேர் சந்தேக நபரைப் பாதுகாப்பதற்காக பொலிஸாருடன் முரண்பட் டுள்ளதுடன், அவர்களின் கடமைக்கும் இடையூறு ஏற்படுத்தியுள்ளனர். இதையடுத்து அவர்களும் கைது செய்யப்பட்டனர். (ம-14,113)


## காணி விற்பனைக்கு

நீர்வேலி தெற்கு பூதர்மடம் சந்தியில் பருத்தித்துறை வீதியில் இருந்து 500M தொலைவில் (மலையக்கனவளவு வயிரவர் ஆலயத்திற்கு அருகாமையில்) உள்ள மூன்று பரப்புக் காணியும், பருத்தித்துறை வீதியில் இருந்து 100M தொலைவில் உள்ள பதினொன்றேமுக்கால் வயல் காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 5835 015, 071 630 1452

(CS24440A-1)


# கொடுப்பனவுகள் அடுத்த வாரத்தில்

யாழ்ப்பாணம், ஏப். 13

சமுர்த்தி வங்கிகளில் முதியோர் கொடுப்பனவு உள்ளிட்ட அனைத்துக் கொடுப்பனவுகளும் அடுத்த வாரம் வழங்கப்படலாம் என்று துறைசார் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சமுர்த்தி வங்கிகளில் மார்ச் மாதத்துக்குரிய முதியோர், காத்திருப்போர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சமுர்த்திப் பயனாளிகள் ஆகியோரது கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. ஏப்ரல் மாதத்துக்குரிய. கொடுப்பனவுப் பட்டியல்கள் நேற்றுப் புதன்கிழமை வரை தமக்குக் கிடைக்கவில்லை எனவும் பட்டியல்கள் கிடைத்ததும் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வ[illegible]கி அலுவல[illegible]கள் தெரிவித்த[illegible]ர்.

ஏ[illegible]ல் மாத அரச அ[illegible]வலர்களின் வே[illegible]னம், ஓய்வூதி[illegible]ம் உள்ளிட்ட கொடுப்பனவுகள் அனைத்தும் க[illegible]ந்த 10ஆம் தி[illegible]க்கு முன் [illegible] வழங்கப்படு[illegible]ன அரசாங்க[illegible]தால் அறி[illegible]கப்பட்டதால் [illegible]டுப்பனவுக[illegible]ப்பெறுவோர் [illegible]த்தி வங்கிக[illegible]கு அலைவ[illegible]த் தெரிவிக்கப்பட்டதையடுத்து சமுர்த்தி வங்கிகளுடன் தொடர்புகொண்டபோதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. (ம-14,9)


## English Classes

**Gr. 1 to O/L**

தனி, மற்றும் குழு வகுப்புகள்

Let's learn

- Grammar
- School syllabus
- Spoken
- Writing skills

Monthly exam

வீடு வந்தும் கற்பிக்கப்படும்.

077 331 4608 - யாழ்ப்பாணம்.

(CS49079)AH-1

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் மருதனார்மட வீதியில் இரண்டாவது ஒழுங்கையில் (சிவகுலவீதி) 29 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

077 366 8282

(CS49565)AH-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வழிப்பிள்ளையார் ஆலயத் திற்கு அருகாமையில் 02 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-09 வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- ✓ கைதடி சந்தியிலிருந்து 500M தூரம்
- ✓ A-09 வீதியிலிருந்து 50M தூரத்தில் காணி உள்ளது.

தொடர்பு: 076 4365 814, 076 7390 413

(CS 24428 B)A-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 36 பரப்புக் காணி விற்பனைக்கு.

**நிலப்பரப்பு**

புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காப்பற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.

1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்து ஆயிரம் ரூபா மட்டும் (125.000/=)

3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து 1 1/2 KM தூரம்.

தொடர்பு: 076 755 8606, 077 6385 683

(CS 24428 C)A-1

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 39 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- 1 பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும் (200.000/=)
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

பார்வையிடும் நேரம் காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை

தொடர்பு:- 076 733 6047, 076 333 6079, 076 733 6093


# மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 03 . 1943



இறப்பு 11 . 04 . 2023

## திருமதி பூபாலசிங்கம் இசைஞானவதி

**(கட்டுவன், மயிலிட்டி தெற்கு)**

மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பளை, கட்டுவனைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கு, சிவன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூபாலசிங்கம் இசைஞானவதி (பேபியக்கா) கடந்த (11.04.2023) செவ்வாய்க்கிழமை மாலை 7.00 மணிக்கு இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சிந்தாமணி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், ஆறுமுகம் - வைத்திலிங்கம், வைத்திலிங்கம் இராசக்கண்ணு ஆகியோரின் அன்பு மருமகளும், வைத்திலிங்கம் பூபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், கந்தையா புண்ணியவதி (பிரான்ஸ்), சிவக்கொழுந்து சிவகாமசுந்தரி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், புஸ்பமலர் குலேந்திரன் (கனடா), புஸ்பராணி நந்தகுமார் (கனடா), புஸ்பகினி கருணாகரன், கந்தையா சிறீஸ்கந்தராஜா (கனடா), புஸ்பமதி சசிகுமார் ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும், தேவராணி பரராஜசிங்கம் (கனடா), இந்திராணி தர்மராஜா (கனடா), சக்திதாசன் (கனடா), சந்திரதாசன் (ஜேர்மனி), பிறேமதாசன் (கனடா), விஜயதாசன் (கனடா), கண்ணதாசன் (கனடா), வசியதாசன் (கனடா) ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2023) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

**தகவல்:**

வசியதாசன் - 077 475 9700
மோகன் - 077 983 5870,
ராசன் - 074 157 4728

(CR/39639)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13. 04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.